Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12


## அரிய பழைய பாடல்கள்..
## ..புதிய இசையில்




ACD

Produced by: ℗&© 2011
**Kennedy** Ministries
A-4, Deju Plaza, No.2, South Avenue
Srinagar Colony, Saidapet, Chennai - 600 015
T: +91 44 22353500, 9940667881, 9940350460
E: kennedy@kennedyministries.org W: www.kennedyministries.org
facebook.com/kennedyministries

Music On
**music mindss**
A GOSPEL - MEDIA COMMUNICATIONS
Post Box No. 5312|Chennai - 24|Tel: 044-42 917 917
2472 5031, 2480 0632, Tele - Fax: 2480 3938
E-mail: gospelmedia@musicmindss.com,
Visit us at: www.musicmindss.com
M.R.P. ₹ 75/- in Tamilnadu. ₹ 85/- in Other States in India.
BUY ORIGINAL CD's/MP3/DVD WITH MUSIC MINDSS HOLOGRAM

எல்லா கிறிஸ்தவ புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்!





Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# ஒளி எக்காளம்

VOL . 5 ISSUE . 8 தனிப்பிரதி ரூ 20/= மார்ச் 2012



# தாழ்மையும் பெருமையும்

நிஜா கென்னடி



**தன்னை உயர்த்துகிறவனெவனும், தாழ்த்தப்படுவான், தன்னை தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்** (லூக்கா 18:14). தங்களை உயர்வாக எண்ணி, தங்களை தாங்களே புகழ்ந்து பேசுகிற எல்லோரும் தாழ்த்தப்படுவார்கள். **அகந்தை வந்தால் இலச்சையும் வரும் தாழ்ந்த சிந்தையுள்ளவர்களிடத்தில் ஞானம் உண்டு** (நீதிமொழிகள் 11:2). பெருமையுள்ளவர்கள் மற்றவர்களைவிட தங்களை உயர்வாகவும், மிகச் சிறந்தவர்கள் என்றும், மற்றவர்களை தாழ்வாகவும் நினைப்பார்கள். அவர்கள் செல்லுகிற வழியே சரியானது என்று சொல்லுவார்கள். இவர்கள் தேவனது உதவியில்லாமலேயே வாழலாம் என்று நினைப்பவர்கள். தேவனை தங்கள் வாழ்வின் முதலிடத்தில் வைக்காமல், அவரை நம்பாமல் வாழ்பவர்கள். தேவனை தலையாக வைத்து வாழ்வதனால் வரும் தேவ ஆசீர்வாதங்கள் மற்றும் தேவனிடமிருந்து வரும் உதவியை தடுத்து விடுகிறார்கள். தங்கள் சுய இஷ்டம்போல் வாழ்வார்கள். மற்றவர்கள் மனது வேதனைப்படும்படியாக, மோசமாக நடந்து கொள்வார்கள். சண்டையை உண்டாக்குபவர்களாய் இருப்பார்கள் (நீதிமொழிகள் 13:10). மற்றவர்கள் சொல்லும் அறிவுரைகளைக் கேட்கமாட்டார்கள். பெருமை அழிவுக்கு நேராக கொண்டுபோய்விடும். அவர்கள் எதிர்பாராத வேளையில் விழுந்துவிடும் நிலைக்கு வந்துவிடுவார்கள். அவர்கள் விரும்புகிற காரியம் ஒன்றும் நடக்காது. வீண் பெருமையும், அகந்தையும் உடையவர்கள் பிறரால் வெறுக்கப்படுவார்கள். **மனமேட்டிமையுள்ளவனெவனும், கர்த்தருக்கு அருவருப்பானவன்; கையோடே கைக்கோர்த்தாலும் அவன் தண்டனைக்குத் தப்பான்** (நீதிமொழிகள் 16:5).

இவர்கள் தங்களது படிப்பையும், வேலையையும், தாலந்துகளையும், பணத்தையும் ஆஸ்திகளையும், பொருட்களையும், ஜாதியையும், சமுதாயத்தில் உயர்ந்த பதவியில் இருப்பதையும் பெரிதாகப் பார்ப்பார்கள். சிலர் தங்களது படிப்பை பெரிதாக பார்ப்பதால், அவர்களது படிப்பைக் குறித்தே பெருமையாகப் பேசிக்கொண்டிருப்பார்கள். **மேன்மைப் பாராட்டுகிறவன் கர்த்தரைக்**



**குறித்தே மேன்மைப் பாராட்டக்கடவன்** என்று 1 கொரிந்தியர் 1:30 கூறுகிறது. சிலர் நிறைய படித்திருப்பார்கள், ஆனால், அவர்கள் படித்த படிப்பை பெரிதாகப் பார்க்கமாட்டார்கள். அவர்களது பேச்சிலும், செய்கையிலும், நடந்து கொள்வதிலும் அவர்களுடைய தாழ்மை வெளிப்படும். கர்த்தர்தான் தங்களை இன்னபடிப்பை படிக்க வைத்தார் என்று கர்த்தரை மேலாகப் பார்ப்பார்கள்.

**தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்.** சிலர் உயர்ந்த பதவியில் இருப்பதால் தங்கள் கீழ் உள்ளவர்களை அற்பமாகப் பார்ப்பார்கள். சிலர் அதிகமாய் படித்திருப்பதனால், மற்றவர்களை அற்பமாகப் பார்ப்பார்கள். சிலர் பணம் படைத்தவர்களாய் இருப்பதால், தாங்கள்தான் பணக்காரர்கள் என்றும், மற்றவர்கள் செல்வாக்கற்றவர்கள், ஒன்றுமில்லாதவர்கள் என்று நினைத்து அவர்களை தரக்குறைவாக நடத்துவார்கள். நம் தேவன் பட்சபாதமில்லாதவர். சிலர் உலக அறிவு நிறைந்தவர்களாகவும், எல்லாவற்றையும் அறிந்து வைத்திருப்பதாலும், மற்றவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்று நினைத்து தங்களைத் தாங்களே உயர்வாக எண்ணிக் கொள்வார்கள். சிலர் ஜாதியை வைத்து பெருமை பாராட்டுவார்கள். மற்றவர்களை அற்பமாக எண்ணி, அவர்களிடம் பழகவும், பேசவும் மாட்டார்கள். அவர்களை புறக்கணித்து ஒதுக்கி வைத்திருப்பார்கள். சிலர் தங்கள் பிள்ளைகள் நல்ல படிப்பை படித்ததாலும், உயர்ந்த பதவியில் இருப்பதாலும், அவர்களைக்குறித்து பெருமை பேசிக் கொண்டிருப்பார்கள்.

சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் இன்ன படிப்பை படித்தால்தான் மற்றவர்கள் தங்களை மதிப்பார்கள் என்று கருதி பிள்ளைகளுக்கு அந்தப் படிப்பில் ஆர்வம் இல்லாவிட்டாலும்கூட அவர்களை வற்புறுத்தி, பெருமைக்காக படிக்க வைப்பார்கள். அதனால் அந்த பிள்ளைகள் அந்த குறிப்பிட்ட துறையில் முன்னேற முடியாமல், முதன்மை நிலையில் வந்து பிரகாசிக்க முடியாமல் போய்விடுகிறது. சில பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகள், டாக்டர் அல்லது இன்ஜினியர் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை கொள்வார்கள். உயர்ந்த பதவியில் இருப்பவர்களும், செல்வந்தர்களும் தங்களுக்கு மிகவும் நெருக்கமானவர்கள், நண்பர்கள் என்று சொல்லிக் கொள்வதை சிலர் பெருமையாக நினைக்கிறார்கள். சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் முதல் மதிப்பெண் எடுக்காமல், இரண்டாவது இடத்தில் வந்துவிட்டால் முதலிடத்தை பெற்ற பிள்ளையைக்குறித்து என் பிள்ளைக்கு முன்னால் இவனெல்லாம் ஒன்றுமில்லை என்று தன் பிள்ளையை உயர்வாகவும், மற்ற பிள்ளையை அற்பமாக, தாழ்வாக பேசுவார்கள். சிலர் மற்றவர்கள் விலையுயர்ந்த பொருட்கள் அல்லது வாகனத்தை வாங்கினால், இவனெல்லாம் போய் இப்படி விலையுயர்ந்தவற்றை வாங்குகிறானே என்று பொறாமை கொள்வார்கள். தாங்கள் மட்டும்தான் விலையுயர்ந்தவற்றை வைத்திருக்க வேண்டும் என்று நினைப்பார்கள்.

இவர்கள் தங்களை உயர்வாகவும், மற்றவர்களை தாழ்வாகவும் பார்ப்பதால் இப்படியாக பேசுவார்கள். சிலர் பணம் படைத்தவர்களை உயர்வாகவும், பணமில்லாதவர்களை தாழ்வாகவும் பார்ப்பார்கள்.

பிரியமானவர்களே, கர்த்தர் பார்க்கிற விதமாய் பார்க்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும். கர்த்தர் ஒரு மனிதனை எப்படியாகப் பார்க்கிறார் என்பதை நாம் அறிந்து அவருடைய பார்வையில், எல்லாவற்றையும் பார்க்க வேண்டும். உலகம் பார்க்கிற விதமாய் நாம் பார்த்தால் நம்மை உயர்வாகவும், மற்ற எல்லோரையும் தாழ்வாகவும், அற்பமாகவும் தான் பார்ப்போம் அல்லது சிலரை உயர்வாகவும், சிலரை தாழ்வாகவும் பார்ப்போம்.

பெருமையுள்ளவர்கள் எப்பொழுதும் மற்றவர்களை குறைசொல்லிக்கொண்டேயிருப்பார்கள். அவர்களில் ஒரு குறையும் இல்லாததுபோல, தவறே செய்யாதவர்களைப்போல பேசுவார்கள். தங்களை முழுமையானவர்கள் என நினைத்து மற்றவர்கள்மேல் குற்றம் சொல்லிக் கொண்டேயிருப்பார்கள். எந்த விதத்தில் குற்றம் கண்டுபிடிக் கலாம் என்று பார்த்துக் கொண்டே யிருப்பார்கள். இயேசு கிறிஸ்துவிடம் என்ன குற்றம் கண்டுபிடிக்கலாம் என வேதபாரகரும் பரிசேயரும் வகை தேடிக் கொண்டிருந்தார்கள். இயேசு கிறிஸ்து பாவமில்லாமல் வாழ்ந்ததால் யாரும் அவரை குற்றப்படுத்த முடியவில்லை (யோவான் 8:46).

இயேசு கிறிஸ்துவிடம், விபசாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை கொண்டு வந்து நிறுத்தினார்கள். இப்பாவத்தை செய்கிறவர்களை கல்லெறிந்து கொல்ல வேண்டும் என்று சட்டம் கூறுகிறது; நீர் என்ன சொல்கிறீர் என்று கேட்டார்கள். உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று கூறினார். சுற்றியிருந்தவர்கள், அவரின் வார்த்தைகளைக் கேட்ட போது, மனசாட்சியில் குத்தப்பட்டு, ஒவ்வொருவராக அங்கிருந்து போய்விட்டார்கள். இயேசு கிறிஸ்து அந்த ஸ்திரீயிடம் உன்னை குற்றஞ்சாட்டின வர்கள் ஒருவனும், உன்னை குற்றவாளி என்று தீர்ப்பளிக்கவில்லை. நானும் உனக்கு தீர்ப்பளிக்கவில்லை. நீ இனிப் பாவம் செய்யாதே என்றார்.

பிரியமானவர்களே, நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். நாம் எப்பொழுதும் மற்றவர்களை குறைசொல்லுகிறவர்களாக இருக்கிறோமா? நாம் ஒரு தவறும் செய்யவேயில்லையா? மற்றவர்களை குறைசொல்லுவதற்கு முன்பாக சற்று யோசித்து பார்ப்போம். நாம் எல்லா காரியங்களிலும் சரியாய் இருக்கிறோமா? நம்மிடம் பாவம் இருந்தால் முதலில் நாம் மனந்திரும்புவோம். பின் மற்றவர்களை சரி செய்வோம்.

நாம் மற்றவர்களை நியாயந்தீர்ப்பதற்கு பதிலாக நம் உள்நோக்கத்தையும், நடத்தையையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். மற்றவர்களுக்கு மன வேதனை உண்டாக்கும் குணம் நம்மிடம் இருந்தால் நம்மைவிட்டு அகற்றுவோம். மற்றவர்களை குறைச்சொல்லி வேதனை உண்டாக்கும் வார்த்தைகளை அடிக்கடி பேசிக் கொண்டிருந்தோமானால், இதுவே நம் பழக்கமாகிவிடும். இதை நம்மால் கட்டுப்படுத்த முடியாது. நம்மிடமுள்ள விட்டுவிடுவதற்கு கடினமான இந்த பழக்கங்கள், நடத்தை முறைகளை , நாம் மற்றவர்களிடமிருந்து அகற்ற விரும்புகிறோம். மற்றவர்களின் குறைகளை பெரிதாக்கி காட்ட விரும்புகிறோம். அதே நேரத்தில் நாம் செய்த குறைகளை பெரிதுபடுத்தாது விட்டு விடுகிறோம். மற்றவர்கள் செய்த தவற்றை எடுத்துரைப்பதற்குமுன், நாம் அதைச் சொல்ல தகுதியுள்ளவர்களா? என்று முதலில் நம்மை நாமே நிதானிப்போம். மற்றவர்களை மன்னிப்போம். நாமே போலியாக இருந்துகொண்டு, மற்றவர்களை நியாயந்தீர்க்கக் கூடாது. கர்த்தருடைய வார்த்தையின்படி, மற்றவர்களை நியாயந்தீர்க்காதிருப்போம் (மத்தேயு 7:1-5).

**யாரையும் அற்பமாக எண்ணாதிருப்போம்.** பேதுருவும், யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்றும் அறிந்து கொண்டார்கள் (அப்போஸ்தலர் 4:13). மீன்பிடிக்கும் தொழிலைச் செய்த பேதுருவை கர்த்தர் தம்முடைய ஊழியத்திற்கென்று தெரிந்து கொண்டார். பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு ஒரே நாளில் மூவாயிரம் பேர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டார்கள். அவன் பிரசங்கிப்பதை கேட்டும்போதே ஜனங்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். இயேசு கிறிஸ்துவையும்கூட, கல்லாதவன், தச்சனுடைய மகன் என்று அற்பமாக பார்த்தார்கள். அவர் வல்லமையோடு, அதிகாரத்தோடு வேத வார்த்தைகளை பிரசங்கிப்பதை ஆச்சரியத்தோடுகூட பார்த்தார்கள். ஒருவனை உயர்த்துவதும், தாழ்த்துவதும் கர்த்தரே. நாமாக யாரையும் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்று எடை போட்டுவிடக் கூடாது. மற்றவர்களை தாழ்வாக பேசும் வார்த்தைகளையும், அற்பமாக பார்க்கிற பார்வையையும், எண்ணும் எண்ணங்களையும் நம்மைவிட்டு அகற்றுவோம்.



**பரிசேயனும், ஆயக்காரனும்**

சிலர், தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணினார்கள். அவர்களுக்கு போதிப்பதற்காக இயேசு கிறிஸ்து ஒரு உவமையை பயன்படுத்தினார். ஒரு பரிசேயனும் (மற்றவர்களின் பார்வைக்கு பரிசுத்தமாக இருந்துகொண்டு, உள்ளத்தில் பாவங்களால் நிறைந்திருப்பவன், மாய்மாலக்காரன்), ஒரு ஆயக்காரனும் (வரி வசூலிப்பவன்) ஜெபிப்பதற்காக ஆலயத்துக்குச் சென்றனர். பரிசேயன் தேவனிடம் நான் திருடுகிறவனாக, ஏமாற்றுகிறவனாக, விபச்சாரக்காரனாக இல்லாமல், இந்த ஆயக்காரனைக்காட்டிலும் மிகவும்



நல்லவனாக இருக்கிறேன், வாரத்தில் இரண்டு நாட்கள் உபவாசம் இருக்கிறேன், வருமானத்தில் பத்தில் ஒரு பாகத்தை கொடுக்கிறேன் என்று ஜெபம் பண்ணினான். வரி வசூலிப்பவன், வானத்தைக்கூட ஏறெடுத்துப் பார்க்காமல், தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்று ஜெபித்தான். பரிசேயன் தன்னை மிகவும் நல்லவன் என்று அறிக்கை செய்து கொண்டிருந்தான். ஆனால், வரிசூலிப்பவனோ தான் ஒரு பாவி என்பதை ஒத்துக்கொண்டான். தான் செய்த பாவங்களுக்காக மனம் வருந்தி, தாழ்மையோடுகூட தேவனுடைய இரக்கத்திற்காக கெஞ்சினான். அதனால் இவனே நீதிமானாக்கப்பட்டவனாக, தேவனுக்கு உகந்தவனாக திரும்பிச் சென்றான். ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும், தாழ்த்தப்படுவான்; தன்னை தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். நாமும் வரி வசூலிப்பவனைப்போல நம்மை தாழ்த்தி, அவருடைய கிருபைக்காக தினமும் ஜெபிக்க வேண்டும்.

பரிசேயனோ சுயநீதியை உடையவனாக இருந்தான். சுயநீதி, பெருமைக்கு நேராக கொண்டு செல்கிறது. மற்றவர்களை வெறுக்க வைக்கிறது. தேவனிடமிருந்து கற்றுக்கொள்வதை தடுக்கிறது. பெருமை, தேவனிடமிருந்து நம்மை பிரித்து விடுகிறது. சுயநீதியை உடையவர்கள், வேத வார்த்தையைப் பேசாமல், அவர்களது மனது விரும்புகிறபடியே, அவர்களது பார்வைக்கு சரியாகத் தோன்றுவதையே பேசுவார்கள். தேவனுடைய பார்வையில் எது சரியானது என்பதை பார்க்க மாட்டார்கள். சுயநீதி (நம்முடைய நீதி) அழுக்கான கந்தையைப்போல் கர்த்தருடைய பார்வையில் உள்ளது. நற்செயல்களை செய்வதினாலோ, ஆலயத்துக்கு தவறாமல் செல்வதினாலோ, தசமபாகம் கொடுப்பதினாலோ, உபவாசிப்பதினாலோ, பாவமில்லாமல் வாழ்வதினாலோ யாரும் நீதிமான்களாக முடியாது. இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அவருடைய இரத்தத்தினால் கழுவப்பட்டால் மட்டுமே நீதிமான்களாக்கப்படுவோம்.

இவர்கள் மற்றவர்களுக்கு முன்பாக நல்லவர்களாய், பக்தியுள்ளவர்களைப்போல நடித்தார்கள். அவர்கள் உள்ளமோ மாயத்தினாலும், தீமையினாலும், பொருளாசையினாலும் நிறைந்திருந்தது. மாயக்காரர்களாகிய இவர்களை பார்த்து இயேசு கிறிஸ்து இப்படியாகக் கூறுகிறார்: **நீங்கள் மனுஷர் முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள்; தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார்; மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது** *(லூக்கா 16:15).*

உயர்ந்த பதவி, நல்ல வேலை, பணம், ஆஸ்திகள் இருந்தால் மற்ற மனிதர்கள் நம்மை உயர்வாக நினைப்பார்கள் என்று அநேகர் எண்ணுகிறார்கள். மற்றவர்கள் தங்களை மதிக்க வேண்டும், பெருமையாக பேசவேண்டும் என்றும் அநேகர் விரும்புவார்கள். மனுஷர்கள் முக்கியமாக கருதும் காரியங்கள், தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது. தேவன் இதை வெறுக்கிறார். அநேகர் பணம், ஆஸ்திகள் தங்களுக்கு போதுமான அளவு இருப்பதால், தேவனைத் தேடமாட்டார்கள். தேவனைத் தேட வேண்டும் என்ற எண்ணமும் வருவதில்லை. அவர்கள் ஆவிக்குரிய ரீதியில் வளர முடியாமல் பணம் தடுக்கிறது. ஒரு மனிதனுடைய வாழ்க்கை தரத்தை வைத்து, அதாவது அவன் எல்லா வசதி வாய்ப்புகளோடு செல்வச் செழிப்புடையவனாக வாழ்ந்தால், அவன் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்வதாக உலக மனிதர்கள் கூறுவார்கள். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாமல், வெறும் செல்வச் செழிப்புடன் வசதியாக வாழும் வாழ்க்கை வீண். சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள் என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது.

எல்லோரிடமும் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்றும், எல்லோரும் தங்களை விரும்ப வேண்டும், பாராட்ட வேண்டும் என்றும், மற்ற மனிதர்கள் தங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் நினைத்து மனிதர்களுக்கு பிரியமாய் நடக்கிறீர்களா? பிரியமானவர்களே! இப்படி நடந்தால், தேவன் உங்களை ஏற்றுக் கொள்ளமாட்டார். இரண்டு எஜமான்களுக்கு ஒருவனால் ஊழியம் செய்ய முடியாது. ஒருவனை பகைத்து ஒருவனை ஏற்றுக் கொள்ள வேண்டும். தேவனையும், உலகத்தையும் ஒரே நேரத்தில் நேசிக்க முடியாது. கர்த்தருக்கும், மனுஷருக்கும் பிரியமாய் இருக்க முடியாது.

### தாழ்மையினால் வந்த உயர்வு

**தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்** *(யாக்கோபு 4:6).* இயேசு கிறிஸ்துவின் தாயாகிய மரியாள் தாழ்மையுள்ளவளாக இருந்தாள். மரியாள் வாழ்ந்த காலகட்டத்தில் அநேக பெண்கள் இருந்தார்கள். கர்த்தரோ, இயேசு கிறிஸ்துவை பெற்றெடுப்பதற்கு மரியாளை தெரிந்து கொண்டார். அவள் தாழ்மையாக இருந்ததினால், தேவனிடத்தில் கிருபையை பெற்றுக் கொண்டாள். தேவ தூதன் சொல்லிய வார்த்தைகளை அப்படியே விசுவாசித்து ஏற்றுக் கொண்டாள். அவள் இருதயத்தின் தாழ்மையை கர்த்தர் கண்ணோக்கிப் பார்த்தார். அவள் ஆவியில் நிறைந்து கர்த்தரை மகிமைப்படுத்தி இப்படியாக கூறுகிறாள்: **அவர் தம்முடைய அடிமையின் தாழ்**



மையை நோக்கிப் பார்த்தார்; இதோ, இது முதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள். இருதய சிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார். பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார் (லூக்கா 1:48,51,52). பெருமை யுள்ளவர்கள் தேவன் சொல்வதை அப்படியே ஏற்றுக்கொள்ள மறுப்பார்கள். தாழ்மையுள்ளவர்கள் தேவன் சொல்வதை மறுக்காமல் அப்படியே ஏற்றுக்கொண்டு தேவனது ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்வார்கள்.

தேவன் நம்மைக்குறித்தும், நம்மைக்கொண்டு செய்யப்போகும் காரியங்களையும் நம்மிடம் பேசும்போதும், நாம் தாழ்மையுடன் இருந்து அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். அதை புறக்கணிக்கக் கூடாது.

இயேசு கிறிஸ்துவும் சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலிப்பியர் 2:8). ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார். எல்லா நாமத்திற்கும் மேலான இயேசு என்ற நாமத்தை தந்தருளினார்.

## பெருமையினால் வந்த விளைவு

மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும்; மனத்தாழ்மையுள்ளவனோ கனமடைவான் (நீதிமொழிகள் 29:23). நெபுகாத்நேச்சார் தன் அரண்மனையின்மேல் உலாவிக் கொண்டிருக்கும்போது, எனது வலிமையினால் நான் எவ்வளவு பெரியவன் என்று காட்டுவதற்காக, நான் கட்டின மகா பாபிலோன் என்று சொன்னான். அப்படி அவன் பெருமைகொண்டு தன்னை உயர்த்தினபடியால் தேவன்



அவனை மிருகத்தைப்போல மாறச் செய்தார். அவன் மனிதனைப்போல சிந்திக்காமல் மிருகத்தின் இதயம் உடையவனானான் (தானியேல் 4:16). அதனால் ஜனங்களிடமிருந்து வெளியேற்றப்பட்டான். அவனுடைய அதிகாரத்தைக் கர்த்தர் எடுத்துப்போட்டார். தேவனே இராஜ்ஜியங்களை ஆளுகை செய்கிறார். அவர் விரும்புகிறவர்களுக்கு ஆளுகையைக் கொடுப்பார்





என்பதை நெபுகாத்நேச்சார் கற்றுக் கொள்ளும்வரை புல்லைத் தின்று மிருகங்களோடு வாழ்ந்தான். அவன் வானத்தை நோக்கிப் பார்த்தபோது, அவன் புத்தி தெளிந்து, உன்னதமான தேவனை ஸ்தோத்தரித்து, அவரைப் புகழ்ந்து மகிமைப்படுத்தினான். அவன் தன்னை தாழ்த்தினபோது, கர்த்தரை மகிமைப்படுத்தினான். அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமுமானவைகள்; அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்றான் (தானியேல் 4:37).

ராஜா பெருமைகொண்டதால், கர்த்தர் அவனை தாழ்த்தினார். மனநலம் குன்றினவனாய் மாற்றினார். சகல அதிகாரமுள்ள மனிதனை ஒன்றுமில்லாதவனாக மாற்ற கர்த்தரால் முடியும். கர்த்தரே சகல அதிகாரத்தை உடையவர். என் கையில்தான் சகல அதிகாரமும் உள்ளது என்று சொல்லாதிருப்போமாக. பெருமையோடு, மற்றவர்களைப் பற்றி சிந்திக்காது, தன்னைப் பற்றி மட்டுமே சிந்திக்கிற சுயநலமுடையவர்கள். கர்த்தரை தங்கள் வாழ்க்கையிலிருந்து அகற்றி விடுவார்கள். கர்த்தருக்கு அவர்கள் வாழ்க்கையில் இடமே இருக்காது. நம் வாழ்க்கையில் வெற்றிகள் மற்றும் உயர்வு வரும்போது கர்த்தரை மறந்துவிடாமல் தாழ்மையோடு இருந்து அவரை மகிமைப்படுத்துவோம். ஆமென்!

**உயர்வு வரும்போது கர்த்தரை மறந்துவிடாமல் தாழ்மையோடு இருந்து அவரை மகிமைப்படுத்துவோம்**

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

**உள்நாட்டு வருட சந்தா** ரூ. 200/-
**வெளிநாட்டு வருட சந்தா** ரூ. 2000/-

S.PAULRAJ KENNEDY என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். ICICI வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**
ICICI **வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா

# சீஷத்துவத்தின் வல்லமை



## ஏஞ்ஜலின் தீப்தி

**த**ன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான் (மத்தேயு 10:39). அப்போஸ்தலனாகிய பேதுருவின் பிரயாணம் (வாழ்க்கை) இயேசுவோடு தொடங்குவதாக லூக்கா 5-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளது. அப்போஸ்தலனாகிய பேதுருவும், மற்ற மீனவர்களும், இரவு முழுவதும் பிரயாசப்பட்டு ஒரு மீன்கூட பிடிக்க முடியாமல், தங்கள் வலைகளை கழுவிக் கொண்டிருக்கிறார்கள். அந்த சமயத்தில், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, பேதுருவின் படகில் அமர்ந்தபடி, ஏராளமான ஜனங்களுக்கு பிரசங்கித்து விட்டு, பேதுருவை மீன் பிடிக்கச் சொல்லுகிறார். அப்படி செய்து, ஏராளமான மீன்களை பிடித்து ஆச்சரியப்பட்ட பேதுருவும், யாக்கோபும், யோவானும், தங்களது மீன் பிடிக்கும் தொழிலை விட்டுவிட்டு, இயேசுவைப் பின்தொடர்ந்து செல்கிறார்கள். இயேசு கிறிஸ்து தம்மோடு இருப்பவர்களிடம் தம்மைப் பின்பற்றுவதின் கிரயத்தை சொல்லுகிறார். நரிகளுக்கும், பறவைகளுக்கும் இருப்பதற்கு இடமுண்டு, ஆனால், தேவனுடைய குமாரனுக்கோ இடமில்லை.

நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரைகட்டிக் கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய்; நீ முதிர்வயதுள்ளவனாகும் போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டு போவான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார் (யோவான் 21:18). இந்த வசனத்தில் இயேசு கிறிஸ்து, பேதுருவின் அழைப்பை, தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறார். இது, எப்படி பேதுரு தன்னுடைய விருப்பத்தை தியாகம் செய்து, கர்த்தருடைய சபையைக் கட்டினான் என்பதை காண்பிக்கிறது. இயேசு தம்முடைய சபையை பேதுருவாகிய பாறையின் மேல் கட்டுவதாகச் சொல்லுகிறார்.

அநேக சமயங்களில், இயேசு கிறிஸ்து தம்முடைய சீடர்களை ஊழியத்திற்கென்று அனுப்பும்போது, பணமோ, அப்பமோ, மாற்று வஸ்திரமோ கொடுத்தனுப்பவில்லை. அப்படியிருந்தும், அவர்களுக்கு எதுவும் குறைவுபடவில்லை. அவர்கள், அவரை நம்பியிருந்ததுபோல, இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் அவர்களுக்கு எல்லாவற்றையும் தந்தார். லூக்கா 12:33-ல், தம்முடைய சீஷர்களிடம், உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சை கொடுங்கள், அப்பொழுது பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷம் கிடைக்கும், அது எப்போதும் குறைந்து போவதில்லை என்கிறார். நான் விசுவாசிக்கிறேன், இப்படிப்பட்ட காரியங்களின் வழியே அவர்கள் போனதினால், தங்களது சொந்த வாழ்க்கையைவிட துணிச்சலான சரித்திரத்தில் இடம்பெறக்கூடிய பெரிய காரியங்களைச் செய்ய கர்த்தரால் அவர்கள் உருவாக்கப்பட்டார்கள் என்று. யாக்கோபும், ஸ்தேவானும் சுவிசேஷம் சொல்லிக் கொண்டிருக்கும்போது கொல்லப்பட்டார்கள் என்று வேதம் சொல்லுகிறது. மேலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததினாலே, அப்போஸ்தலர்களில் அநேகர், தலை துண்டிக்கப்பட்டும், கொலை செய்யப்பட்டும் போனார்கள் என்று கடந்த காலத்தின் சரித்திரத்தில் காண்கிறோம்.

இயேசு கிறிஸ்து அவருடைய சீஷர்களிடம், அவரினிமித்தம் அவர்கள் பாடுகள் படுவார்கள் என்று முன்கூட்டியே எச்சரிக்கிறார். ராஜாக்களுக்கு முன்பாகவும், அதிகாரத்திலுள்ளவர்கள் முன்பாகவும் சாட்சியாக நிறுத்தப்படுவார்கள் என்கிறார். மேலும் ஜெப ஆலயங்களில் தண்டனை பெறும்படியாக நிறுத்தப்படுவார்கள் என்கிறார். இயேசு கிறிஸ்து லூக்கா 21:16-ல், அவரைப் பின்பற்றுகிறவர்கள், குடும்பத்தினரின் மற்றும் சொந்தங்களின் எதிர்ப்பையும் சந்திப்பார்கள் என்றும், சிலர் கொலை யும் செய்யப்படுவார்கள் என்கிறார். ஆதலால், கிறிஸ்துவிற்காக நாம் எதைச் செய்தாலும் அதற்கு இகழ்ச்சியும், ஏளனமும் பதிலாக வந்தால் கவலைப் படக்கூடாது. இது ஏனென்றால், ஆவிக்குரியவனே ஆவிக்குரியக் காரியங்களை அறிந்து கொள்ள முடியும் என்பதினாலேயே.

இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள், அநேகர் உட்பிரவேசிக்க வகை தேடினாலும், அவர்களாலே கூடாமற்போகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் (லூக்கா 13:24). இடுக்கமான வாசல் வழியே நுழையும் என்று சொல்லும்படியான வாழ்க்கை வாழ்வது, வழக்கமான வாழ்க்கை அல்ல. இது தண்ணீர் ஓட்டத்திற்கு எதிர்த்து நீச்சல் செய்வதற்கு சமமாகும். இது கடினமானது, ஆனால் முடியாதது அல்ல. அப்படியென்றால், ஏன் இதில் அநேகர் நுழைய தவறுகிறார்கள்? அது ஏனென்றால், சோதனைகளை சந்திக்க நேரும் போதும், இந்த உலகத்தின் மீதுள்ள கவலையும், உலகத்தின் மீதுள்ள இச்சைகளினாலும் மேற்கொள்ளப்படும் போதும், இதை விட்டுவிடுகிறார்கள். எனவே, இப்படி இடுக்கமான வாசல் வழியே நாம் நுழைய, சோதனைகளை சந்திக்க நம்மை எப்படி தகுதிப்படுத்து வது?

மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை **நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத் தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கன மகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில் காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்**படாதவைகளோ நித்தியமானவைகள் (2 கொரிந்தியர் 4:17-18). அப்போஸ்தலனாகிய பவுல், கொரிந்தியருக்கு சொல்லுகிறான், நாம் காணும் இந்த வாழ்க்கையும், உலகமும் தற்காலிகமானவை, அழிந்தும் போகும் என்றும், எப்போதும் இருக்கின்ற அழிந்து போகாத ஆவிக்குரியக் காரியங்களை வாஞ்சியுங்கள் என்கிறான். நாம் பரலோகத்தில் சேர்த்து வைக்கும் பொக்கிஷத்தை திருடன் திருடுவதுமில்லை, பூச்சி அரிப்பதும் இல்லை.

**பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது** (கொலோசெயர் 3:2,3). சுயத்திற்கு மரித்தும், கிறிஸ்துவிற்கு பிழைத்துமிருக் கிற அப்போஸ்தலனாகிய பவுல் அடிக்கடி தன்னை இயேசுவின் அடிமை என்று சொல்லுகிறான். சுயாதீனமுள்ள நாமும் சீஷர்களைப் போல என்ன நடந்தாலும் அவரைப் பின்தொடர நம் மனதில் முடிவு செய்துவிட்டால், சீஷர்கள் பெற்றுக் கொண்ட அதே உரிமையை நாமும் பெற்று அனுபவிப்போம்.

பேதுருவிற்கு திரும்பி வருவோம் - தன்னுடைய வேலையை விட்டுவிட்டு, இயேசுவை அவன் பின்தொடர்ந்ததால், தேவனுடைய அதிகாரத்தை அவனுக்குக் கொடுப்பதின் அடையாளமாக, பரலோக ராஜ்யத்தின் சாவிகள் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. பேதுரு முடவனை நடக்கச் சொல்லலாம். அவனுடைய நிழல் சுகம் தரும். இது அவனுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரம். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு (எபேசியர் 6:12). எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக (எபேசியர் 1:20).

இந்தியாவிலிருந்த காலஞ்சென்ற ஊழியக்காரர் ஒருவர், அடிக்கடி தாம் பரலோகத்திற்கு சென்று வந்ததைப் பற்றிக் கூறுவார். இந்த உலகத்தைக் குறித்து எடுக்கப்படும் முக்கியமான முடிவுகளை தீர்மானிப்பதற்கென்று ஒரு குழு பரலோகத்தில் உள்ளது என்றும், அதில் இந்த பூமியில் உள்ள அப்போஸ்தலர்களும் உள்ளனர் என்றும் கூறியுள்ளார்.

கர்த்தருக்கு விரோதமாக இஸ்ரவேல் ஜனங்கள் கன்றுக்குட்டியைத் தொழுது கொண்டபொழுது, மோசே கர்த்தரோடு முகமுகமாய் இஸ்ரவேல் ஜனங்களுக்காகப் கெஞ்சி பிரார்த்திக்கிறான். கர்த்தரும் அழிக்காதபடி தம் முடிவை மாற்றிக் கொள்கிறார். மேலும், கர்த்தருடைய சிநேகிதன் என்று சொல்லப்பட்ட ஆபிரகாம், கர்த்தரிடம், எத்தனை நீதிமான்கள் ஒரு பட்டணத்தில் இருந்தால் அதை அழிக்கமாட்டீர் என்று கேட்கிறான். கிறிஸ்துவுக்குக் கீழாக இல்லாத எந்த அதிகாரமும் வல்லமையும், இப்போதும், இனி வரும் காலத்திலும் கிடையாது.

**பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்தில் நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்** (மத்தேயு 16:19). கர்த்தர் தம்மால் சீஷர்களாகத் தெரிந்து கொள்ளப்படுகிறவர்களுக்கு, பூமியிலே எதை அவர்கள் அறிக்கை செய்கிறார்களோ அது பரலோகத்திலும் நடக்கும் என்று வாக்குத்தத்தம் கொடுக்கிறார். இது ஆகாப் ராஜாவின் காலத்திலே நடந்தது. தீர்க்கதரிசியாகிய எலியா பரலோகத்திலிருந்து மழை வராது என்று சொன்னவுடனே, மூன்றரை வருடங்களுக்கு மழை வரவில்லை. மறுபடியும் எலியா ஜெபித்த பிறகே மழை வந்தது. இஸ்ரவேலின் தலைவனான யோசுவா, சூரியனையும், சந்திரனையும் தரித்து நிற்கச் சொன்னபோது, நாள் முழுவதும் எமோரியரை போரிட்டு மேற்கொள்ளும்வரை, அப்படியே தரித்து நின்றது. ஒரு மனுஷனுடைய சத்தத்தைக் கர்த்தர் கேட்ட அந்த நாள்போல அதற்கு முன்னரும், பின்னரும் இருந்ததில்லை.

**இஸ்ரவேலின் பரிசுத்தரும் அவனை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: வருங்காரியங்களை என்னிடத்தில் கேளுங்கள்; என் பிள்ளைகளைக்குறித்தும், என் கரங்களின் கிரியைகளைக் குறித்தும் எனக்குக் கட்டளையிடுங்கள்** (ஏசாயா 45:11). கீழே உள்ள வசனம், கடைசி காலங்களில் இரண்டு தீர்க்கதரிசிகளுக்குக் கொடுக்கப்படும் தேவ வல்லமையை சொல்லுகிறது. **அவர்கள் தீர்க்க தரிசனஞ் சொல்லிவருகிற நாட்களிலே மழை பெய்யாதபடிக்கு வானத்தை அடைக்க அவர்களுக்கு அதிகாரமுண்டு; அவர்கள் தண்ணீர்களை இரத்தமாக மாற்றவும், தங்களுக்கு வேண்டும்போதெல்லாம் பூமியைச் சகலவித வாதைகளாலும் வாதிக்கவும் அவர்களுக்கு அதிகாரமுண்டு** (வெளிப்படுத்தின விசேஷம் 11:6). இயேசுவின் கால கட்டத்திலும், எதிரிகளின் மீது அதிகாரம் சீஷர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. விஷத்தைக் குடித்தாலும், அது அவர்களை பாதிக்காது. அப்போஸ்தலனாகிய பவுல், கப்பல் சேதத்தினால், மெலித்தா தீவில் இருந்தபோது, அவனுடைய கையை விரியன் பாம்பொன்று தீண்டினபொழுதும் அவனுக்கு ஒன்றும் நேரவில்லை, சாவினின்றும் விடுவிக்கப்பட்டான்.

**இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங் கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்த மாட்டாது. ஆகிலும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார்** (லூக்கா 10:19,20). உண்மையான ஐசுவரியத்தை பெற்றுக் கொள்ளும் வழியானது, கர்த்தர் நம்மை எதை விடச் சொல்லுகிறாரோ அதுவே. அது நம்முடைய மேன்மையான, பரிபூரணமான வாழ்வை சுவீகரிப்பதற்குத் தடையாக இருக்கலாம். தேவ வல்லமையோடு இருப்பதற்கும், இப்போது இந்த பூமியிலே இயேசுவோடு நெருங்கின உறவில் இருப்பதற்கும், அதன்பிறகு இயேசுவோடுகூட உள்ள நித்திய ஜீவனுக்கும் தடையாக இருக்கலாம்.

இந்த எல்லா ஆளுமையும், உரிமையும் ஆவிக்குரிய வாழ்வின் உச்சகட்டத்தில் இருப்பவர்களுக்கு மாத்திரமே பிரத்யேகமாகக் கொடுக்கப்படுவதாகும். இயேசுவின் அடிமையாகிய எப்போதும் கர்த்தருடன் நெருங்கிய தொடர்பில் இருப்பவனாகிய பவுல், தெசலோனிக்கேயரை, இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்கிறான். தேவ ஆவியானவரோடு ஒத்திருக்கும் பவுல், எனக்குள்ளும் தேவ ஆவி உண்டென்று எண்ணுகிறேன் என்கிறான் (1 கொரிந்தியர் 7:40). அதினால் சொல்லுகிறான்: இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் என்று (கலாத்தியர் 2:20). அந்த நிலையில் பவுல், இயேசுவைப்போல வாழவும், சிந்திக்கவும், செயல்படவும் தொடங்கியிருந்தான்.

கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது (பிலிப்பியர் 2:5). ஆமென்!





# பரிட்சைக்கு ஆலோசனை

## பால்ராஜ் கென்னடி

1. கேள்வித் தாளைப் படிக்கும் போது, அவசரப்படாமல் படியுங்கள். கேள்வியை சரியாகப் புரிந்து கொண்டால்தான், சரியான பதிலை எழுத முடியும். கேள்வியை ஒரு தடவை மட்டும் வாசிப்பது கூடாது . ஒரு தடவைக்குமேல் இன்னொரு தடவை படிக்க வேண்டும். முதல் தடவை படித்தது முழுமை பெறுவது இரண்டாவது தடவை படிக்கும்போதுதான். இது எப்படியென்றால், ஒரு குறிப்பிட்ட பேருந்திற்காக (bus) பேருந்து நிறுத்தத்தில் (bus stop) காத்துக் கொண்டிருக்கிறீர்கள். அப்பொழுது ஒரு பேருந்து வருகின்றது என்று வைத்துக் கொள்வோம். அந்த பேருந்து எந்த வழியாகப் போகிறது என்பதை தெரிந்து கொள்ள தட (route) எண்ணை பார்ப்போம். அதை மேலோட்டமாகப் பார்த்துவிட்டு அந்த பேருந்தில் ஏறிவிடமாட்டோம். ஏனென்றால், அவசரப்பட்டு, தவறாக, வேறொரு பேருந்தில் ஏறிவிட்டால், நாம் வேறு மார்க்கமாகப் போய்விடுவோம், அலைச்சல், சோர்வு ஏற்படும். இவற்றையெல்லாம் தவிர்ப்பதற்காகவே நாம் பேருந்தின் தட எண்ணை மேலோட்டமாக ஒரு தடவை மாத்திரம் பார்க்காமல், மிகக் கவனமாக மறுபடியும் பார்த்து, நாம் போக வேண்டிய பேருந்தில் ஏறுகிறோம். அதேபோல கேள்வியை மறுபடி மறுபடி படித்து, இது இன்னக் கேள்விதான் என்பதை சரியாகப் புரிந்து கொண்டு, பின்னர் அதற்கானப் பதிலை எழுதுங்கள். பிற்பாடு நீங்கள் வீட்டிற்கு வந்தபிறகும், சந்தேகம் எழாது. ஏனென்றால், நீங்கள் கேள்வியை மறுபடி மறுபடி படித்து நன்றாக புரிந்து கொண்ட பின்னரே பதிலை எழுதியுள்ளீர்கள்.

2. முதலாவது, உங்களுக்கு நன்கு தெரிந்த பதில்களை எழுதுங்கள். வேகமாக எழுதி விடுவீர்கள். உங்களுக்கு நன்கு தெரியாத பதில்களை எழுதும்போது, அதற்கு அதிக நேரம் எடுப்பீர்கள். யோசித்து, யோசித்து எழுதுவீர்கள். வேகம் வராது, அதினால் அதிக நேரம் எடுப்பீர்கள். பின்னர், தெரிந்த பதில்களை எழுத நேரம் இல்லாமல் ஆகிவிடும். உங்களது பதில் தாளை திருத்தும் ஆசிரியர்களுக்கு, உங்களது தாளை திருத்தும் போது, அதிகமாக அடித்தல், திருத்தங்கள் இல்லாமல் தெளிவாக இருப்பதால், மனதிலே உற்சாகத்தோடு மதிப்பெண்களைப் போடுவார்கள். எடுத்த உடனே அடித்தல், திருத்தல், தெளிவின்மையிருந்தால், திருத்தும் ஆசிரியர்கள் உற்சாகத்தை இழந்து விடுவார்கள், எரிச்சலும், கோபமும் வந்துவிடும்.

3. கேள்வியின் எண்களை சரியாகப் பார்த்து, உங்களது பதில்களிலும் அந்தந்த குறிப்பிட்ட எண்களை எழுதுங்கள். பரிட்சையை எழுதி முடித்த பின்னரும், பதில்களுக்கு சரியான எண்களை எழுதியிருக்கிறீர்களா என்று சரி பாருங்கள். இது முக்கியமான காரியமாகும். எண்களை சரியாக எழுதாமல், தவறாக எழுதிவிட்டால், நீங்கள் சரியாக எழுதியும் மதிப்பெண்கள் பெற முடியாமல் ஆகிவிடும்.



வார்த்தைக்கு வார்த்தை சரியான இடைவெளிவிட்டு அழகாக எழுதுங்கள்.

4. உங்களது தேர்வு எண்ணை சரியாக எழுதுங்கள். பரிட்சை எழுதி முடித்தவுடன், உங்களது தேர்வு எண்ணை, பிரதான தாளிலும், கூடுதலாக இணைக்கப்பட்ட தாள்களிலும் சரியாக எழுதியுள்ளீர்களா என்பதை சரிபாருங்கள். இது மிக மிக அவசியம்.

5. ஒவ்வொரு பக்கத்திலும் பக்க எண்ணை தெளிவாக எழுதுங்கள். பரிட்சை எழுதிமுடித்தபிறகும், வரிசைக் கிரமமாக சரியான பக்க எண்களை எழுதியுள்ளீர்களா என்பதை சரிபாருங்கள்.

6. ஒருபோதும் பதட்டப்படாதீர்கள், அவசரப்படாதீர்கள். தவறாக எழுதிவிடக் கூடாது என்பது, எழுதுவதைக் காட்டிலும் முக்கியம். பரிட்சை எழுதப்போகும் முன்பு, கடைசி நேரத்தில் மற்ற வகுப்புத் தோழர்கள், தோழிகள், இதை படித்து விட்டாயா? அதை படித்து விட்டாயா? அந்தக் கேள்வி கண்டிப்பாக வரும். இந்தக் கேள்விக்கானப் பதிலை நான் படிக்கவில்லை, நான் என்ன செய்யப் போறேன்னு தெரியலை என்றெல்லாம் பேசுவதைக் கேட்டு, மன இறுக்கம் (tension) ஆகிவிடாதிருங்கள். கடைசி நேரத்தில் புதிதாக ஒன்றை முழுமையாக உங்களால் படிக்க முடியாது.

நிச்சயமாக பரிட்சை எழுதப் போவதற்கு முன்பு ஒரு இறுக்கம் இருக்கும். அதை மேற்கொள்ள, இயேசப்பா ஸ்தோத்திரம், இயேசப்பா ஸ்தோத்திரம் என்று பல தடவை உங்கள் உள்ளத்தில் சொல்லுங்கள். அப்பொழுது தேவ பிரசன்னம் வரும், உங்கள் இறுக்கம் நீங்கிப் போகும்.

7. பரிட்சை எழுதப்போகும் பிள்ளைகளின் வீட்டிலிருப்போர், உங்களது பிள்ளைகள் பரிட்சைகளை எழுதி முடிக்கும்வரை, தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகள் பார்ப்பதை நிறுத்தி வையுங்கள். அவைகள் கிறிஸ்துவைப் பற்றிய நிகழ்ச்சியானாலும் சரி, அந்தப் பிள்ளை கவனமாகப் படிப்பதும், நன்றாக பரிட்சை எழுதி நல்ல மதிப்பெண்களைப் பெறவேண்டுமென்பதும்தான், அந்தப் பிள்ளையை உங்களுக்குக் கொடுத்த கர்த்தரின் விருப்பம். அதற்கு நீங்கள் தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளைப் பார்ப்பது தடையாகிவிட வேண்டாம். தொலைக்காட்சி பெட்டியிலிருந்து வரும் சத்தம், உங்களது பிள்ளையின் கவனத்தை சிதற வைக்கும்.

பரிட்சை எழுதும் பிள்ளைகளை, உங்களது குடும்ப ஜெபத்தில் அதிக நேரம் இருத்தி வைக்காதீர்கள். ஒரு குறிப்பிட்ட நேரம் அவர்களோடு சேர்ந்து, அவர்களுக்காக முக்கியமாக ஜெபியுங்கள். பின்னர் அவர்களை படிப்பதற்கு அனுப்பிவிட்டு, மற்றவர்கள் தொடர்ந்து ஜெபியுங்கள்.

9. பரிட்சை எழுதும் பிள்ளைகள், குளிப்பதற்கு, உடை உடுத்தி ஆயத்தமாவதற்கு, சாப்பிடுவதற்கு, வீட்டில் முன்னுரிமை கொடுங்கள். அவர்களது நேரம் முக்கியம். அவர்களை காலதாமதப்படுத்தி அவர்களுக்கு மன இறுக்கத்தை உண்டு பண்ணிவிடாதிருங்கள்.

10. பரிட்சை எழுதும் பிள்ளைகளை, கோபப்படும்படி, சோர்வுறும்படி, தாழ்வு மனப்பான்மை கொள்ளும்படி பேசாதிருங்கள். அவர்களது மன உற்சாகம் முக்கியம். அவர்களது ஆசீர்வாதத்திற்கு நீங்கள் தடையாக இருந்து விடாதீர்கள்.

11. ஒரு குறிப்பிட்ட நேரம் வேதத்தை வாசித்து, ஜெபித்துவிட்டு, பின்னர் பிள்ளைகளை தேர்வுக்கானப் பாடங்களை படிக்க வையுங்கள். அப்பொழுது தேவ பிரசன்னம் உங்களது பிள்ளையை ஆட்கொள்ளும்.

12. தேர்வு எழுதப்போகும் ஒவ்வொரு தடவையும், பெற்றோர், பிள்ளைகளை ஜெபித்து அனுப்புங்கள்.

13. பிள்ளைகள், பேனா, பென்சில், ரப்பர், ஸ்கேல் இன்னும் தேவையானதை எடுத்துச் சொல்லுகிறார்களா என்பதை சரிபார்த்து, அனுப்புங்கள்.